IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.314/2022

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | NARASIMMAN |
| FATHER'S NAME | : | VENIGOUNDER |
| VILLAGE | : | LAKSHMIYAMMALPURAM |
| OCCUPATION | : | NIL |
| AGE | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of February 2026.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார்.ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். தேதி, ஞாபகம் இல்லை. 2008ம் வருடம், ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் பிற்பகல் 03.00 மணியளவில் லட்சுயம்மாள்புரம் ஊருக்கு மேல் எனது பங்காளி ஆனந்தன் என்பவரை நிலத்தின் அருகே ஆஜர் எதிரிகள் ரங்கநாதன் என்னை அடித்தார். நான் அவரை அடித்து அவர் பள்ளத்தில் விழுந்துவிட்டதால் என் மீது வெள்ளை நிற கல் ஒன்றை எடுத்து தலையில் அடித்துவிட்டார். நான் கீழே விழுந்தபோது ரங்நாதன் மீண்டும் என்னை காலால் எட்டி உதைத்தார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.**சம்பவம் 2008ம் வருடம், 8வது மாதத்தில் நடந்தது. ஆஜர் எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2.சம்பவம் நடந்த இடத்தில் அக்கம்பகக்த்தில் யாராவது இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. ஆஜர் எதிரிகள் எனது உறவினரா என்றால், 2ஆம் தரப்பினர் முறையில் உறவினர்கள்தான்.

3. ஆஜர் எதிரிகளின் நிலமும், எனது நிலமும் பக்கம், பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் பக்கத்தில் இருப்பதால் எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். நிலம் பிரச்சனை சம்பந்தமாக ஊர்க்காரர்கள் சமரசம் பேசி பிரச்சனை முடியவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு சம்பவம் பொய் என்றாலும் ஆஜர் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும், நான் தவறி கீழே விழுந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது

பொய்யாக புகார் அளித்து நிலப்பிரச்சனை சம்பந்தமாக சமாதானத்திற்கு வருவார்கள் என்றால் பொய் அளித்திருக்கிறனே் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.25/2024

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SHREENIVASAN |
| FATHER'S NAME | : | MOGANARANGAN |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | DESIGNER |
| AGE | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of February 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அத்தை ஆவார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் எனது அத்தை வீட்டில் நகை மற்றும் பணம் திருடு போனதாக கேள்விபட்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் ஒசூரில் இருந்தேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. எனது அத்தை சொல்லிதான் தெரியும்.